8. அரசினர் தீர்மானம்

பேரவை ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"பேரவை விதி 25 (1)-ன் கீழ், பேரவை இன்று ஒத்தி வைக்கப்பெற்று மீண்டும் 20—3—1987 ஆம் தேதியன்று காலை 10-00 மணிக்குக் கூடும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 20—3—1987-ம் தேதி காலை 10-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-34 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

31. கோயம்புத்தூர் மற்றும் குன்னூர் ஏல மையங்களில் விற்கப்படும் தேயிலைக்கு விதிக்கக்கூடிய வரியினை குறைப்பது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 10—12—1986 ஆம் நாளிட்ட 1259 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959] 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

32. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் 1981—82 ஆம் ஆண்டிற்கான பத்தாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

33. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் 1982—83-ம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள். [1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6/1974) 39 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (ஆங்கிலம்).

1987 மார்ச் 11]

34. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் 1983–84 ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள் [1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6/1974) 39 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (ஆங்கிலம்).

35. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் 1985–86 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

36. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி நிறுவனத்தின் 1985–86 ஆம் ஆண்டிற்கான இருபத்தொன்றாம் ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

37. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் 1985–86 ஆம் ஆண்டிற்கான முப்பத்தேழாவது ஆண்டறிக்கை. (1956-ம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

15. பொதுப்பணி மற்றும் போக்குவரத்துத் துறைகள் குறித்த தமிழ்நாடு அரசின் 1963–64 முதல் 1965–66 வரை மற்றும் 1969–70 முதல் 1971–72 வரையிலான ஆண்டு கணக்குகள் மீதான குழுவின் எட்டாவது அறிக்கை (ஏழாவது பேரவை) மற்றும் அதற்கு முந்தைய அறிக்கைகளில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்திரெண்டாவது அறிக்கை. (தமிழ்).

16. 1981–82 ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப் பெற்ற மானியங்களிலும், சாட்டப் பெற்ற நிதி ஒதுக்கீடுகளிலும் மிகையாகச் செலவழித்த தொகை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்து மூன்றாவது அறிக்கை. (தமிழ்).

17. 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 1/1987) இணைப்புடன்.